# 19-01-2023 செய்தி

## ஒரே நாடு... ஒரே தேர்தல்:

- மக்களவைக்கும், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும் இத்திட்டம் குறித்து அரசியல் கட்சிகளின் கருத்தை தேசியச் சட்ட ஆணையம் கேட்டறிந்து வருகிறது.

**BJP அஜந்தா 1967 வரை**

- 1967 வரை மக்களவைக்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் ஒன்றாகத்தான் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.
- அதற்குப் பிறகு சில மாநில அரசுகள் கலைக்கப்பட்டது, புதிய மாநிலங்கள் உருவானது உள்ளிட்ட காரணங்களால் மக்களவைக்கும் பல மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கும் வெவ்வேறு நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டிய சூழல் உருவானது.
- 1983இலும் 1999இலும் மீண்டும் பழைய நடைமுறைக்குத் திரும்புவதற்கான சாத்தியங்கள் பரிசீலிக்கப்பட்டன.
- 2014 மக்களவைத் தேர்தலுக்கான பாஜகவின் வாக்குறுதிகளில் ஒன்றாக இது இடம் பெற்றது.
- 2016இல் பிரதமர் நரேந்திர மோடி நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.
- 2018இல் தேசியச் சட்ட ஆணையம் இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் கருத்துகளைக் கேட்கத் தொடங்கியது. ஆனால், அப்போதும் அரசியல் கட்சிகளின் கருத்தொற்றுமையைப் பெற முடியவில்லை.
- தேர்தல் செலவு குறையும், ஆளும் கட்சிகள் தேர்தல் நேரப் பணிகளைக் குறைத்து, நலத்திட்டங்களில் கவனம் செலுத்த முடியும், வாக்குப்பதிவு அதிகரிக்கும்.
- வேட்பாளர்கள் கறுப்புப் பணத்தையும் ஊழல் பணத்தையும் தேர்தலுக்குப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த முடியும் என இந்தத் திட்டத்துக்கு ஆதரவாக முன்வைக்கப்படும் பல வாதங்களில் நியாயமில்லாமல் இல்லை.
- இதற்காகச் சில மாநிலங்களின் சட்டமன்றப் பதவிக் காலத்தைக் குறைக்கவும்.
- சில மாநிலங்களில் நீட்டிக்கவும் வேண்டியிருக்கும். அதற்கேற்ப அரசமைப்புச் சட்டத்திலும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்திலும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.
- இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்தொற்றுமையைப் பெற வேண்டும்.
- அது அத்தனை எளிதல்ல. உதாரணத்துக்கு, தமிழ்நாட்டில் ஆட்சியிலிருக்கும் திமுக இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறது. எதிர்க்கட்சியான அஇஅதிமுக ஆதரவு தெரிவித்துள்ளது.

**பிரச்சனைகள்**

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை அவற்றின் பதவிக் காலத்துக்கு முன்பாகவே கலைப்பது மக்களாட்சித் தத்துவத்துக்கு முரணானதாகக் கருதப்படும்.
- மேலும், ஒரே நேரத்தில் மக்களவை, சட்டமன்றத் தேர்தல்களை நடத்துவது தேசியக் கட்சிகளுக்கே சாதகமானது என்று மாநிலக் கட்சிகள் அஞ்சுவதும்,

- இத்திட்டம் இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது என்று திமுக உள்ளிட்ட கட்சிகள் சுட்டிக்காட்டியிருப்பதும் புறக்கணிக்கத்தக்க கருத்துகள் அல்ல. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் அவசரத்தால் மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சியிலிருக்கும் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான மோதல்கள் அதிகரிப்பதையும், பிரிவினைவாத சக்திகள் வலுவடைவதையும் தவிர்க்க வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக்கிறது.

**முடிவுரை**

- அனைத்து சாதக பாதகங்களையும் ஆராய்ந்து, அனைத்து அரசியல் கட்சிகளிடம் கருத்தொற்றுமையை உருவாக்கிய பிறகே 'ஒரே நாடு... ஒரே தேர்தல்' திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து முடிவெடுக்க வேண்டும்.

## திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து தேர்தல் :



- திரிபுராவில் பிப்ரவரி 16ம் தேதியும், மேகாலயா, நாகாலாந்தில் பிப்ரவரி 27ம் தேதியும் ஒரே கட்டமாக சட்டப்பேரவை தேர்தல் நடத்தப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தல் முடிவுகள் மார்ச் 2ம் தேதி வெளிடப்படுகின்றன.

**தலா 30 தொகுதிகள்**

- திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து ஆகிய 3 மாநிலங்களிலும் தலா 30 சட்டப் பேரவை தொகுதிகள் உள்ளன. இந்த 3 மாநிலங்களிலும் பெண் வாக்காளர்களின் பங்களிப்பு எப்போதும் அதிகமாக இருக்கும் என தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவித்தார்.

| தேர்தல் நிகழ்வுகள் | திரிபுரா | மேகாலயா, நாகாலாந்து, ஈரோடு (கி) |
|---|---|---|
| மனுதாக்கல் தொடக்கம் | ஜன.21 | ஜன.31 |
| மனுதாக்கல் நிறைவு | ஜன.30 | பிப்.7 |
| மனுக்கள் பரிசீலனை | ஜன.31 | பிப்.8 |
| வாபஸ் பெற கடைசி நாள் | பிப். 2 | பிப். 10 |
| வாக்குப்பதிவு | பிப்.16 | பிப்.27 |
| வாக்கு எண்ணிக்கை | மார்ச் 2 | மார்ச் 2 |

**நடத்தை விதிகள் அமல்**

- 2023ம் ஆண்டில் மொத்தம் 9 மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடக்க உள்ளன. முதலாவதாக தற்போது 3 வட கிழக்கு மாநிலங்களுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இதில், திரிபுராவில் பாஜகவும், நாகாலாந்தில் தேசியவாத ஜனநாயக முன்னேற்ற கட்சியும், மேகாலயாவில் தேசிய மக்கள் கட்சியும் ஆட்சியில் உள்ளன.
- திரிபுராவில் கடந்த 2018-ல் நடந்த தேர்தலில், பாஜக முதல் முறையாக வெற்றி வெற்றதால், இங்கு பாஜக கூடுதல் கவனம் செலுத்துகிறது.

### சரிந்த ஏற்றுமதி

- சர்வதேச அவல் நிலவிய எதிர்மறையான சூழல்களால் இந்தியாவின் ஏற்றுமதி கடந்த டிசம்பர் மாதத்தில் 12.2 சதவீத சரிவைச் சந்தித்துள்ளது.
- அத்துடன், ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக உள்ள நிலை (வர்த்தகப் பற்றாக்குறை) 2,376 கோடி டாலராக அதிகரித்துளளது.
- பொறியியல் பொருள்களின ஏற்றுமதி கடந்த டிசம்பர்மாதத்தில் 12 சதவீதம் சரிந்து 908 கோடி டாலராகியுள்ளது.
- எதிர்மறை வளர்ச்சியைப்பதிவு செய்தஏற்றுமதித் துறைகளில் காபி, முந்திரி, தோல்பொருள்கள், மருந்து பொருள்கள், தரைவிரிப், கைவினைப் பொருள்கள் ஆகியவை அடங்கும்.

# இந்தியாவில் கால்பதிக்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள்

## NEP 2020

- கடந்த 2020ம் ஆண்டு ஒன்றிய அரசு வெளியிட்ட புதிய கல்வி கொள்கையின் ஒரு பகுதியாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகள் இந்தியாவில் தொடங்க ஏற்பாடுகள் நடக்கிறது.
- இதன்படி இந்தியாவில் தனது வளாகத்தை அமைக்க விரும்பும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனம், சர்வதேச அளவிலான தர வரிசை பட்டியலில் முதல் 500 இடங்களுக்குள் இருக்க வேண்டும்.
- ஆண்டறிக்கையை தவறாமல் யுஜிசியிடம் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பாக முன் அனுமதியின்றி எந்த படிப்பையும் ரத்து செய்வதோ, வளாகத்தை மூடுவதோ கூடாது.

**அதிகாரம்**

- மாணவர்களுக்கான அடிப்படை தகுதிகள், கட்டண அமைப்பு சம்பந்தப்பட்ட பல்கலையின் உள்ளூர் வளாகமே முடிவு செய்யும் அதிகாரம் பெற்றிருக்கும். ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்வு, அவர்களது சம்பள நிர்ணயத்திலும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அதிகாரம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கட்டாயமாகுமா ஒரே நாடு ஒரே நுழைவுத் தேர்வு**

- ஒன்றிய அரசின் ஒரே நாடு, ஒரே நுழைவுத் தேர்வு திட்டத்தின் கீழ் மருத்துவ கல்விக்கு நீட், பொறியியல் படிப்புக்கு ஜெ.இ.இ, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கியூட் என்று நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**இடைநிற்றல் அதிகரிக்கும்?**

- ஒன்றிய அரசின் 4 ஆண்டு இளநிலை பட்டப்படிப்பு திட்டத்துக்கு எதிர்ப்புகள் அதிகம். எதிர்ப்பாளர்கள் முன் வைக்கும் கருத்துக்கள்
- 4 ஆண்டு இளநிலை படிப்பு என்பது நீண்டகாலமாகும். இதனால், ஏழை மாணவர்கள் அதிகம்பேர் சேர மாட்டார்கள்.
- பாதியில் படிப்பை நிறுத்தினால் சான்றிதழ், பட்டயம் என்று வழங்கும் முறையால் இடைநிற்றல் அதிகரிக்கும்.

**வேணும்னா படிக்கலாம் பிடிக்கலைன்னா வெளியேறலாம்**

- யுஜிசியின் புதிய அறிமுகம், பிளக்சிபில் இளங்கலை படிப்புகள். அதன்படி இந்த படிப்பில் ஒருவர் எப்போது வேண்டுமானாலும் வெளியேறிவிட்டு, மீண்டும் சேர்ந்து படிக்கும் வசதி உண்டு.
- ஓராண்டு மட்டும் படித்துவிட்டு வெளியேறுபவர்களுக்கு சான்றிதழ், இரண்டாண்டு படித்தவர்களுக்கு பட்டய சான்று, மூன்றாண்டு படித்தால் இளநிலை பட்டச்சான்று, நான்கு ஆண்டுகளும் படித்தால் இளநிலை ஹானர்ஸ் பட்டப்படிப்புக்கான சான்று வழங்கப்படும் என்று யுஜிசி அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.
- ஒருவர் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் சேர்ந்த 7 ஆண்டுகளில் இந்த 4 ஆண்டு இளங்கலை படிப்பை முடிக்க வேண்டும் என்ற ஒரே நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

**இளநிலை படிப்பு இனி 4 ஆண்டு:**

- இந்த ஆண்டு கல்வித்துறையில் அடுத்த புதிய முயற்சி, 4 ஆண்டு இளநிலை பட்டப்படிப்பு. 4 ஆண்டு இளங்கலை ஹானர்ஸ் படிப்பில் சேருபவர்கள், முனைவர் பட்டம் பெற விரும்பினால் கடைசி ஆண்டில் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளலாம்.
- இதன் மூலம் முதுகலைப்பட்டம் இல்லாமலேயே நேரடியாக பிஎச்டி பட்டம் பெற முடியும்.

**இந்தியா, மாலத்தீவு**

- சமூக மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ், மாலத்தீவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.52.82 கோடி கூடுதல் நிதியுதவி.
- மாலத்தீவு தேசிய பல்கலைக்கழகம் இடையிலான கல்விசார் ஒத்துழைப்பு, ஹனிமாடு சர்வதேச விமான நிலைய விரிவாக்கத் திட்டம் உள்ளிட்டவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.
- மாலத்தீவுக்கு 2 படகு ஆம்பு லன்ஸ்கள் இந்தியா சார்பில் அளிக்கப்பட்டன.